**திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013**

---

திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 11(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்தரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSA/100-18010) அனுசரணையாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைக் காட்டுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத்தொழில்நுட்பவியலாலர்களுக்கான தேசிய திரைப்பட நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவினது 3 ஆம் உப பிரிவு | வருமான, செலவினக் கணக்கிலும் ஐந்தொகையிலும் கையொப்பமிட அதிகாரமளிக்கும் சபையின் தீர்மானத்தின் பிரகாரமான சபை அங்கத்தவர்கள் இருவரால் அவை கையொப்பமிடப்படாதிருந்தன. |
| (ஆ) | 2002 ஜூன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்பு ரூபா 400,000 முதலீட்டிற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 579,972 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 180,328 ஆகும். இதனால் நிதி விளைவுகளில் ரூபா 399,644 அதிகரிப்பு தென்பட்டது. முதலீட்டுப் பெறுமதியை சீராக்கியமையே அதிகரிப்புக்கான காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்திறன்

1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான 15 ஆண்டுகளின்போது திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களின் பொருட்டு ஓய்வூதியம், மருத்துவ உதவி, மரணச் சடங்குகளுக்கான உதவி என ரூபா 19,971,980 கூட்டுத்தொகையாக வழங்கப்பட்டமை சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஓய்வூதியம் வழங்கப்படுவதற்குத் தகைமை வாய்ந்த கலைஞர்களையும் தொழில்நுட்பவியலாளர்களையும் வருடாந்தம் தெரிவு செய்து அவர்களை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டுமாயினும், 2005 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறான தெரிவு மேற்கொள்ளப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

**(அ) அதிகாரச்சட்ட நோக்கம் நிறைவேறாமை**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழிலநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை என்பவற்றிற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருந்தபோதும், அது மீளாய்வாண்டின்போது ஒரேயொரு தடவையே தனது கூட்டத்தை நடாத்தியிருந்தது.

(ii) அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் உள்ள பின்வரும் நோக்கம் 2013 ஆம் ஆண்டிலும் நிறைவேறாதிருந்தது.

* திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு உதவி அளிக்குமுகமாக நலனோம்பல் நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு அல்லது சிக்கன சங்கங்கள் மற்றும் ஏனைய சமமான திட்டங்கள் அமுலாக்கப்படல்
* தகைமை வாய்ந்த திரைப்படக் கலைஞர்கள் அல்லது தொழில்நுட்பவியலாளர்களுக்கு 60 வயது பூர்த்தியானதும் கடன், படி, வீட்டு வசதி அல்லது பிற சமமான நலன்களை வழங்குதல்

(iii) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை அமுலாக்குவதற்கெனத் தயாரிக்கப்பட்ட விதிக் கோவை 2003 ஆம் ஆண்டிலேயே இறுதியாக திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது. மாதாந்தம் ரூபா 2,000 எனும் ஓய்வூதிய உதவு தொகை தற்போதைய நிலைமைக்கேற்ப அதிகரிக்கப்படுதல் மற்றும் உதவு தொகைக்கு அருகதையாவதற்கு விதிக்கப்பட்டுள்ள ரூபா 3,000 மாதாந்த வருமான வரம்பை அதிகரிப்பது என்பன தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) **அமுலாக்கப்படாத நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தீர்மானங்கள்**

நம்பிக்கைப் பொறுப்பிடமிருந்த நிலையான வைப்புகளின் மூலம் பெறப்படும் வருடாந்த வட்டி மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனம் நம்பிக்கைப் பொறுப்புக்கு மானியமாக வழங்கிய ரூபா 200,000 தொகையில் ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. நம்பிக்கைப் பொறுப்பின் நிதிசார் நிலைமையை மேலும் முன்னேற்றுவதற்கு 2004 செப்டெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற 79 ஆம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பல 2013 ஆம் ஆண்டு வரை அமுலாக்கப்படாதிருந்தன.

(இ) ருக்மணிதேவி ஞாபகார்த்த நிதியத்தின் ரூபா 462,778 பயன்படுத்தப்பட்டு பாடகர் ஒருவர் இந்தியாவில் ''பூனா'' திரைப்பட நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பை மேற்கொள்வதற்குப் புலமைப்பரிசில் வழங்கும் முறை ஆலோசிக்கப்பட்டபோதும், 1985 முதல் இது செயற்படுத்தப்படாதிருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2013 ஆம் ஆண்டை உள்ளடக்குமாறு கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

### 5.2 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்ட பணிகளை அமுலாக்குவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய விதிக்கோவையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தை முன்னேற்றுதற் பொருட்டு மாதாந்தம் செலுத்தக் கூடிய தொகையை மாத்திரம் வைத்தவாறு எஞ்சிய தொகையை ஆக்கபூர்வமான முதலீடுகளில் பயன்படுத்த வேண்டும். மாதாந்தச் சராசரிச் செலவினம் ரூபா 100,000 க்கும் ரூபா 150,000 க்கும் இடைப்பட்டதாக இருந்தது. மாதாந்தம் ரூபா 800,000 தொடக்கம் ரூபா 1 மில்லியன் வரையான மேலதிக தொகை வங்கி ஒன்றினது நடைமுறைக் கணக்கில் இருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் உள்ள குறைபாடுகள் எனது அறிக்கைகளின் மூலம் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முதலீடுகள்
(இ) ஓய்வூதியக் கொடுப்பனவு